| | | | |
|---|---|---|---|
| 26.07.2021 | அசல் வழக்கு எண்.25/2020 | வா .சா.1 | திரு.டி. வீராசாமி<br>த/பெ.துரைசாமி |

சாட்சி மீண்டும் திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

குறுக்கு விசாரணை - (பிரதிவாதி தரப்பில்)

நான் விவசாயம் செய்கிறேன். பிரதிவாதிக்கு என் வீட்டில் வைத்திருந்த பணத்தை கொடுத்தேன். என்னுடைய வங்கி கணக்கில் இருந்து எடுத்து கொடுக்கவில்லை. அந்த பணம் பல வருடங்களாக சேமித்து வைத்த பணமா என்றால் ஆமாம். விவசாயத்திற்கு வைத்திருந்தபணத்தையும் நிலம் விற்று வைத்திருந்த பணத்தையும் கொடுத்தேன். 500 ரூபாய் நோட்டுகளாக கொடுத்தேனா அல்லது 1000 ரூபாய் நோட்டுகளாக கொடுத்தேனா என்றால் 2000 ரூபாய் நோட்டுகளாக கொடுத்தேன். பிரதிவாதி என்ன தொழில் செய்கிறார் என்றால், நர்சாக வேலை செய்து பணி ஓய்வு பெற்று விட்டார். பிரதிவாதியின் மகன் மோகன்குமார் என்னுடைய நண்பர் என்றால் சரிதான். அவர் இறந்து விட்டார். மோகன்குமார் என்னிடம் அடிக்கடி கடன் வாங்குவார். அவருடன் எனக்கு வரவு செலவு இருந்தது. மோகன்குமார் பெயரில் எந்த ஒரு சொத்தும் இல்லை என்றால் சரிதான். பிரதிவாதிக்கு தற்போது வயது 83 அல்லது 84 வயது இருக்கும் என்றால் சரிதான். நான் என்னுடைய பிராமிசரி நோட்டில் பிரதிவாதி வியாபாரம் செய்வதற்காக கடன் வாங்கினார் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். பிரதிவாதி வீட்டை விட்டு வெளியே வரமுடியாத சூழ்நிலையில் இருக்கிறார் என்றாலும் நான் வழக்கிற்காக வியாபாரம் செய்வதற்காக கடன் வாங்கினார் என்று பொய்யாக சொல்லியிருக்கிறேன் என்றாலும் தவறு .. வா சா ஆ 1 கடனுறுதி சீட்டை எழுதியது யார் என்றால் பிரதிவாதி கூட்டி வந்த ஜெசிஜான் என்ற பெண்மணி எழுதினார். வா சா ஆ 1 கடனுறுதி சீட்டில் உள்ள சாட்சிகள் எனக்கு தெரிந்தவர்கள் என்றால் தெரிந்தவர்கள் தான். அவர்களை பிரதிவாதி கூட்டி வந்தார். என்னிடம் காண்பிக்கப்படும் வா சா ஆ 1 கடனுறுதி சீட்டில் உள்ள

எழுதப்பட்ட விபரங்களில் உள்ள கையெழுத்தும் எழுதியவர் ஜெசிஜான் என்ற கையெழுத்தும் வேறு வேறாக உள்ளன என்றால் சரியல்ல . வா சா ஆ 1 ல் உள்ள கையெழுத்தை பிரதிவாதி என் முன்னால் தான் போட்டார் . பிரதிவாதி தமிழில் தான் கையெழுத்து போடுவார் என்றாலும் தற்போது உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் கையெழுத்து கூட போடமுடியாத நிலையில் இருக்கிறார் என்றாலும் என் முன்னால் பிரதிவாதி தாவா கடனுறுதி சீட்டில் கையெழுத்துபோட்டார் என்று பொய்யாகக சொல்கிறேன் என்றாலும் தவறு. தாவா கடனுறுதி சீட்டில் உள்ள கையெழுத்து பிரதிவாதியின் கையெழுத்து அல்ல என்றாலும் வழக்கிற்காக அது பிரதிவாதியின் கையெழுத்து என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நானும் பிரதிவாதியின் மகன் மோகன்குமாரும் நண்பர்கள் என்றாலும் எனக்கும் அவருக்கும் தான் வரவு செலவு இருந்தது என்றாலும் அந்த வகையில் தான் மோகன்குமாருக்கு எந்த சொத்தும் இல்லாத நிலையில் அவரின் தாயாரின் சொத்தினை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த வழக்கினை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் அப்பட்டமான பொய்.( எதிர் வழக்குரையில் மேற்கண்ட சங்கதிகள் சொல்லப்படவில்லை என்ற வாதி தரப்பு ஆட்சேபணை உடன் பதிவு செய்யப்பட்டது .) பிரதிவாதி என்னிடம் நேரடியாக எந்த வித சட்டப்படியான கடனும் பெறவில்லை என்றாலும் என்னிடம் எந்த ஆவணத்திலும் கையெழுத்து போட்டுக் கொடுக்கப்படவில்லை என்றாலும் பொய். பிரதிவாதிக்கும் எனக்கும் எவ்வித வரவு செலவும் தொடர்பும் கிடையாது என்றால் பொய் . பிரதிவாதி என்னுடன் சேர்ந்த , எனக்கு தெரிந்த ஒரு ராமசந்திரன் என்பவருடன் தன்னுடைய சொத்து சம்பந்தமான ஆவணங்களை கொடுத்து வைத்திருந்தார் என்றாலும், நான் மேற்படி ராமசந்திரனிடம் இருந்து அந்த ஆவணங்களை வாங்கி இந்த வழக்கிற்காக தவறாக பயன்படுத்துகிறேன் என்றால் சரியல்ல. ராமசந்திரன் என்பவரை எனக்கு தெரியாது . பிரதிவாதி எனக்கு சட்டப்படி எனக்கு எந்தவித கடன் தொகையும் திருப்பி கொடுக்க

**கடமைப்பட்டவர் அல்ல என்றாலும் தாவா கடனுறுதி சீட்டு போலியானது என்றாலும் வழக்கிற்காக பிரதிவாதி என்னிடம் கடன் பெற்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் தவறு.**

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.

**SUB COURT, METTUPALAYAM**